3. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) சிங்கள கலாசாரத்தை மேம்படுத்தல், மீள் அபிவிருத்தி செய்தல், கொண்டுநடாத்துதல் போன்று பிற்கால சமூகத்திற்கு அதனை கைமாற்றுவதனைக் கருத்திற் கொண்டு வருடாந்த பெரஹரா கொண்டாட்டமொன்றினை கொண்டுநடாத்துதல்;

(ஆ) பௌத்த மதத்தின் புனர்வாழ்வை கருத்திற்கொண்டு குறைபாடுகள் உள்ள கஷ்டப் பிரதேச விகாரைகள், மத நிலையங்களை மேலெழுப்புவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளல்;

(இ) குறைந்த வருமானமுள்ள பாடசாலை மற்றும் பல்கலைக் கழக மாணவ, மாணவிகளின் கல்வியை மேம்படுத்துவதற்காக புத்தகங்கள் மற்றும் புலமைப்பரிசில் உதவிகளை வழங்கல் மற்றும் அந்நோக்கத்திற்காக திட்டங்களை வகுத்தல்;

(ஈ) கிராமிய மட்டத்தில் இயங்கிவரும் சங்கங்கள் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக திட்டமிடப்பட்ட நோக்கத்துடன் முறையானதோர் ஆலோசனை சேவையொன்றினையும் கருத்திட்டங்களையும் வகுத்தல்;

(உ) இயற்கை மற்றும் வேறு திடீர் அனர்த்தங்களின்போது இடருக்குட்பட்ட மற்றும் இடம்பெயர்ந்த நிர்க்கதியற்ற மக்களுக்கு உதவியளிக்கும், நிவாரணமளிக்கும் வேலைத்திட்டமொன்றினை “சிலுமினி யாத்ரா” எனும் மகுடத்தின்கீழ் நடைமுறைப்படுத்தல்;

(ஊ) தார்மீகக் கல்வி மற்றும் பிரிவெனாக் கல்வி ஆகிய வற்றுடன் அவற்றின் வசதிகளை மேம்படுத்துவதற்காக பலவித தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான கருத்திட்டங்களை ஏற்பாடுசெய்தல்;

(எ) பொதுமக்கள் மற்றும் மார்க்க போதகர்களின் தர்ம ஞானம் மற்றும் மார்க்க அறிவினை விருத்திசெய்து மார்க்க ஞானத் தாகத்தினை தீர்க்கும் நோக்கமாகக் கொண்டு தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் பல்வேறு விதமான நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், போதனைகள் ஆகியவற்றினை அமுலாக்குதல், ஏழை வறிய மக்களுக்கு பௌத்த சஞ்சிகைகளை வெளி யிடுதல்;

(ஏ) சீல முயற்சியின் வளர்ச்சிக்கான நோக்கத்திற்காக அதனோடு தொடர்புபட்ட பக்தர்களுக்கும் அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக அதனோடு தொடர்புபட்ட மாணவ, மாணவிகளுக்கும் 'சில்' துணிகள் மற்றும் புத்தகங்கள், சீருடைக்கான துணிகளை அன்பளிப்புச் செய்யும் தேசிய பிரதேச மட்டத்திலான கருத்திட்டங்களை ஆரம்பித்துவைத்தல்;

(ஐ) குடும்ப அமைப்பு முறையில் இடம்பெறும் உள்ளக வெளிவாரியான பிணக்குகள் காரணமாக மனோ ரீதியில் தாக்கங்களுக்குள்ளானவர்களுக்கும் பலவித பொருளாதார, கலாசார, அரசியல் காரணங்களுக்காக மனோரீதியில் தாக்கங்களுக்கு உள்ளானவர்களுக்கும் அவ்விதமான தாக்கங்களிலிருந்து மீண்டெழுவதற்கும் மீண்டும் பழையநிலைக்கு அவர்களை கொண்டுவரு வதற்கும் அவசியமான முறையான மற்றும் தேர்ச்சி பெற்றவர்களின் ஆலோசனை சேவையொன்றினை ஆரம்பித்தல்;

(ஒ) போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான திட்டங்களுக்கு உட்படுத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனை நிவாரண நோக்காகக்கொண்ட அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்கல்;

(ஓ) மூத்த பிரசைகளின் மனோரீதியான ஆரோக்கியத்தை மேலெழுப்புவதற்காக பலவித ஒன்றுகூடல்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்;

(ஔ) தொழிலற்ற இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பளிப் பதற்காகவும் அவர்களுக்கு சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காகவும் தேவையான தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்கான தொழிற்பயிற்சிப் பாடசாலைகளை தாபித்தல்;

(க) ஒத்த நோக்கங்களைக்கொண்ட உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு புரிந்துணர்வுகளை ஏற்படுத்தல் மற்றும் அந்நியோன்ய மாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்;

(ங) பாடசாலை மாணவ மாணவிகளுக்கான பாடவிதானங் களுக்குட்பட்ட கல்வியொன்றினை வழங்குவதற்காக மத்திய நிலையமொன்றாகச் செயற்படுதல்;

(ச) மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான வையும் அதன் இடைநேர்விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாப னத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், செய் வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

